கல்லூரி முதல்வர் கூறினர். ஆகவே பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஊதியம் நடப்பு ஜூன் மாதம் முடிய வழங்கப்பட்டு விட்டது என்று தெரிகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இதே நிர்வாகத்தின் கீழ் உள்ள காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் கடந்த நான்கு மாதங்களாக ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் சம்பளம் கிடைக்காததால், அங்கேயுள்ள ஆசிரியர்கள் விரைவில் போராட்டம் தொடங்குவதாக அறிவித்துள்ளார்கள். மேலும், தமிழகத்தின் பல்வேறு தனியார் கல்லூரிகளில் ஆசிரியப் பெருமக்களுக்கு சம்பளம் தொடர்ந்து சில மாதங்களுக்குக் கொடுக்காத சூழ்நிலையைக் கருதி, அரசு ஏதேனும் பரிகாரம் காண, ஒரு குழு அமைத்து மாதந்தோறும் அவர்களுக்கு சம்பளம் கிடைக்க வழி செய்யும் வகையில் ஆக்கபூர்வமான காரியத்தில் இந்த அரசு ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபோன்ற குறைபாடுகளைக் கருத்தில் கொண்டுதான், இதுவரையில் தந்துள்ள மானியத் தொகையை உயர்த்தி, ஆசிரியர்களின் சம்பளத்தை சர்க்காரே தருவது என்று உத்தரவு போட்டு, அது இந்த 1-ம் தேதி முதல் அமுலுக்கு வந்தது. இனிமேல் அப்படிப்பட்ட தகராறு எதுவும் வராமல் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் நான்கு மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதுபற்றி அரசின் நடவடிக்கையினைத் தெரிந்துகொள்ள முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய தகவல் இப்போது என்னிடம் இல்லை.

4. அரசின் தீர்மானம்.

மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றுக்கு அரசு உத்தரவாத வரையறையை உயர்த்துதல்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்:—

“மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் குறுகியக் காலக் கடன்,

நடுத்தரக் காலக் கடன், நடுத்தரக் கால மாற்றுவசதிக் கடன் ஆகியவற்றின் உயரளவு வரையறையான ரூ. 6,115.00 இலட்சத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு, கூட்டுறவுத் துறையின் 26—5—1977 ஆம் நாளிட்ட 341 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாடு உத்தரவாதம் அளித்துள்ளதாலும்;

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 8,040.00 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் என்று கருதுவதாலும்;

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ள வாறு, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உத்தரவாத வரையறையை ரூ. 8,040.00 இலட்சத்துக்கு உயர்த்த தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை தீர்மானித்துள்ளது".

இந்தத் தீர்மானத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று ஏற்கெனவே உறுப்பினர்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவரவர்களே, அரசின் உத்தரவாத வரையறையை 61 கோடி ரூபாயிலிருந்து 80 கோடி ரூபாய்க்கு அதிகரிப்பது என்பதைத் தவிர வேறு முக்கிய மான விஷயம் எதுவும் இந்தத் தீர்மானத்தில் இருப்பதாகத் தெரிய வில்லை. இந்தத் தீர்மானத்தையொட்டி கூட்டுறவு சங்கங்களைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாகச் சொல்ல விரும்புவது, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங் களுக்கான இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக மேல்வையிலும், பேரவையிலும் பேசப் பட்டு, இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவை இரண்டாண்டு களில் அதைத் திருத்தி, முழுமையாக அமைக்கிறோம் என்று சொன் னார்கள். பிறகு சென்ற ஆண்டு 'அட்வைஸர்' ஆட்சியிருந்த போது, அவர்களும் இந்த பிப்ரவரி மாதத்திற்குள் இதற்கு முழுமை யாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, இது திருத்தப்படும் என்று சொன்னார்கள். அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரு கின்றன என்று அந்தச் சமயத்தில் அவர்களால் சொல்லப்பட்டது.

1977 ஜூலை 11] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அந்தச் சட்டத்தை எப்போது இந்த அரசு அமுலுக்குக் கொண்டு வரவிருக்கிறது என்பதைப் பற்றி நானும் மற்றவர்களும் அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளைப் பொறுத்த வரையில், இதுவரையில் தேர்தல்களே இல்லாமல், தனிப்பட்ட ஸ்பெஷல் அதிகாரிகளால் இப்போதும் நடத்தப்பட்டு வருகின்றன. தேர்தல்களே நடக்கக் கூடாது என்பதற்காக இதற்கு முன்னால் இருந்த அரசு, ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து, ஜூன் மாதம் வரை எந்தவிதமான தேர்தல்களும் இல்லாதவகையில் அந்த விதியை மாற்றினார்கள். அந்தச் சட்டம் தற்சமயம் வரையில் அமுலில் இருந்து வருகிறது என்று நான் கருதுகிறேன். அது உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு 'அட்வைசர்' ஆட்சியில்—கவர்னர் ஆட்சியில் நமது மாநிலம் இருக்கிறபோது, 'ஸ்பெஷல் ஆபீசர் ஆக்ட்' என்று ஒரு சட்டம் போட்டு, அதன் அடிப்படையில் இந்தக் கூட்டுறவு சங்கங்கள் தனிப்பட்ட நிர்வாக அதிகாரிகளால் நடத்தப்படவேண்டும் என்பது இப்போதும் அமுலில் இருக்கிறது. அந்தச் சட்டமும் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயக முறையில் இதற்கான தேர்தல்களை இன்னும் மூன்று மாதங்களில் நடத்தத் தேவையான காரியங்களை இந்த அரசு செய்ய வேண்டும்.

இதற்கு முன்னால் இந்தக் கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த வரையில், மிகப் பெரிய ஊழல்கள் பரவலாக நடைபெற்றிருக்கின்றன என்பதாக செய்திகள் வந்து, நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் இதற்கான வழக்குகள் எல்லாம் போடப்படும் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததைப் பார்த்தேன். அந்த வழக்குகள் என்ன நிலையில் இருக்கின்றன? அதிலே தவறு செய்தவர்கள் மீது வழக்குப் போட்டு தண்டிக்கும் காரியத்தை இந்த அரசு குறைந்தபட்சம் இரண்டு மூன்று மாதங்களில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

*THIRU A. R. DAMODARAN: Sir, I would like to just mention that the Tamil Nadu Co-operative State House Mortgage Society—the Central Society which has been formed to give loans to various district societies, has for the past two years asked all

the District Societies to stop receiving loan applications from applicants and over the past two years, practically, no funds have been disbursed by the Central Society to the District Societies, as a result of which there has been an almost total cessation of housing activities in the districts. While this resolution seeks to raise the guarantee limit of the Government of Tamil Nadu, obviously the borrowing capacity of the Tamil Nadu State Co-operative Bank will be increased. May I also take this opportunity of bringing to the notice of the Hon. Minister that it is time that some definite action is taken to see that the dormant Housing Societies are again revived with the grant of substantial loans from the Central Housing Society? I wanted to speak on this, because if we wait for the budget, one and a half months more will elapse and the difficulty experienced in the districts will not be resolved.

The other point--I fully support what has been mentioned by my hon. Friend Thiru Swaminathan—is that over the past one and a half years action has been taken to suspend election to various co-operative societies. Elections have been suspended not only in Societies where some malpractices have been alleged but even in well-run Societies where Directorships have fallen vacant. instructions have been received by them from the Government that they should not have elections to fill even the normal vacancies. This goes against the spirit of co-operative movement. I can well appreciate and understand an order in the case of any Societies where any malpractices have been alleged or where any criminal fraud is suspected that elections should not take place. But, the omnibus order that no vacancy in any Board of Directors of any Society in the State or Tamil Nadu should be filled up requires immediate attention and re-consideration. I hope that now that we have a duty elected Government in Tamil Nadu, immediate instructions would be issued to the various Societies through the Registrar of Co-operative Societies that such normal vacancies should be immediately filled up by the due process of election. Thank you, Sir.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசின் தரப்பில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்று, தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதற்காக அரசின் சார்பில்

1977 ஜூலை 11] [திரு. ஜி. ஆர். எட்மண்ட்]

அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் திருத்தத்தைப் பற்றியும், அந்தத் திருத்தச் சட்டம் எப்போது அரசால் கொண்டுவரப்படுமென்றும் கேட்டார்கள். அந்தச் சட்டத்தைத் திருத்துவதுபற்றி அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கூடிய விரைவில் அவையின் முன்னால் வைக்கப்படுமென்ற வாக்குறுதியை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இங்கே தனி அதிகாரிகளின் நிர்வாகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கமும் அதை மிகுந்த அக்கறையோடு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நாட்டிலே நிலவிய 1½ ஆண்டு குடியரசு ஆட்சித் தலைவரின் ஆட்சிக்குப் பின்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவரின் ஆட்சிக் காலத்தில் நாட்டிலேயிருந்த அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி, அதே நேரத்தில் ஒருசில கூட்டுறவுச் சங்கங்களில், மையக் கூட்டுறவு வங்கிகளில் நடைபெற்ற ஊழல்களைக் கருத்திற்கொண்டு, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய நிர்வாகத்தின் பொறுப்பைக் கலைத்துவிட்டு, தனி அதிகாரிகள் கையில் ஒப்படைத்திருக்கிறார்கள். இன்றையதினம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் நிச்சயமாக அதிகாரிகளுடைய பொறுப்பிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களும், வங்கிகளும் எடுக்கப்பட்டு, அரசாங்கத்தாலே நியமனம் செய்யப்படுகின்ற அல்லது சங்க உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிர்வாகிகளின் பொறுப்பில் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்படைக்கப்பட இருக்கின்றன. அதற்கான திட்டங்களை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இன்னும் ஏறத்தாழ 10 தினங்களுக்குள் அரசாங்கம் நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைக்க இருக்கிறது. அந்த நேரத்தில் கூட்டுறவுத் துறைக்கான மானியக் கோரிக்கையும் வைக்கப்பட இருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல முறையில் அறிவார்கள். ஆகவே கூட்டுறவுத் துறைக்கான மானியக் கோரிக்கை அவையின் முன்னால் வைக்கப்படுவதற்கு முன்னர் கூட்டுறவுத் துறை இனி எப்படி இருக்க வேண்டுமென்ற முடிவை அரசாங்கம் எடுத்து, அந்த முடிவை

மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சமர்ப்பிக்குமென்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனல், பொதுவாக இதற்கு முன்னலே இருந்த நிர்வாகத்தில், இதற்கு முன்னலே இருந்த ஆட்சியில் எல்லாக் கூட்டுறவு வங்கிகளிலும் கடுமையான ஊழல் நடந்திருக்கிறதென்பதை இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்களென்று நம்புகிறேன். நடைபெற்றுள்ள ஊழல்களைப் பற்றி, புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அது சம்பந்தமான . . . .

திரு. கோ. சி. மணி: துணைத் தலைவரவர்களே, எல்லா உறுப்பினர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிருர்கள். இரண்டு உறுப்பினர்கள்தான் பேசியிருக்கிருர்கள். ஊழல்கள் செய்தது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. ஊழல்கள் எல்லா மட்டத்திலும் நடந்திருக்கின்றன. எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்ருல், அது சரியாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: துணைத் தலைவரவர்களே, நான் பொதுவாகத்தான் அப்படிச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள், எந்தெந்தக் கூட்டுறவு வங்கிகளில் ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று கேட்டால், அதற்கான தெளிவான பதிலை வைக்க எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 'உறுப்பினர்கள் அறிவார்கள்' என்று சொன்னல் போதும்.

திரு. எம். சங்காலிங்கம்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், எல்லா உறுப்பினர்களும் ஒத்துக்கொள்வார்களென்று சொல்லுவது, ஒன்றைத் தானே எண்ணிக்கொண்டு சொல்வதுபோல் இருக்கிறது. எல்லோரும் அதை ஒத்துக்கொள்ள வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, both the hon. Members are standing. One must yield for the other to speak.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்: இன்றையதினம் அது சம்பந்தமான கோப்புகள் அரசாங்கத்தினுடைய பார்வையில் இருக்கின்றன. எந்தெந்த கூட்டுறவு வங்கிகளில் தவறுகள் நடந்திருக்கின்றன, நிர்வாகச் சீர்கேடுகள் நடந்திருக்கின்றன,

1977 ஜூலை 11] *[திரு. ஜி. ஆர். எட்மண்ட்]*

பாரபட்சமான நிலையில் நடந்திருக்கிறார்களென்ற தகவல்கள் வந்திருக்கின்றன. ஆகவே, அதைப்பற்றித் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், கூட்டுறவு வங்கிகள் அல்லது கூட்டுறவுத் துறை நாட்டிலே இருக்கின்ற ஏழை எளியவர்களுக்குப் பயன்படும்; அதற்கான செயல் முறைகளும், சட்ட திட்டங்களும் நிச்சயமாக ஏற்படுத்துவோமென்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானம், நம்முடைய உத்தரவாதத் தொகையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி, துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

“மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன், நடுத்தரக் கால மாற்று வசதிக் கடன் ஆகியவற்றின் உயரளவு வரையறையான ரூ. 6,115.00 இலட்சத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு, கூட்டுறவுத் துறையின் 26—5—1977 ஆம் நாளிட்ட 341 ஆம் எண் அரசாணையில் தமிழ் நாடு அரசு உத்தரவாதம் அளித்துள்ளதாலும்;

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், உயரளவு உத்தரவாத வரையறையை ரூ. 8,040.00 இலட்சத்திற்கு உயர்த்துவது அவசியம் என்று கருதுவதாலும்;

தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 53/1961) 73-டி பிரிவின்கீழ் சொல்லியுள்ளவாறு, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உத்தரவாத வரையறையை ரூ. 8,040.00 இலட்சத்துக்கு உயர்த்த தமிழ் நாடு சட்டமன்ற மேலவை தீர்மானித்துள்ளது”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.